குகைவாசிகள் கொள்கைப் பாதை



அனைத்துப் புகழ்ச்சிகளும் நன்றிகளும் அல்லாஹ்வுக்கே உரியன. குகைவாசிகள் பதிப்பகம் 2009இல் தொடங்கப்பட்டது. இந்தப் பெயரின் பின்னணி திருக்குர்ஆனில் உள்ள குகை என்றோர் அத்தியாயத்தில் இருக்கின்றது. அல்லாஹ்வை நிராகரித்தபடி மறுமை வாழ்வை வீம்புக்கு மறுத்துக்கொண்டிருந்த ஓர் அரசனுடைய காலத்து இளைஞர்கள் சிலரின் அதிசய வாழ்க்கையை அதில் வாசிக்கிறோம். அவர்கள் அவனது அடக்குமுறையிலிருந்து தப்பித்து குகையில் தஞ்சம் அடைந்தார்கள். அந்தக் குகைவாசிகள் போல இஸ்லாமிய வாழ்க்கையை உறுதியான, சரியான கொள்கை அறிவுடன் காத்துக்கொள்பவர்களாக நாமும் ஆக வேண்டும் என்பதை நினைவூட்டவே இந்தப் பதிப்பகத்தின் பெயர் **'குகைவாசிகள்'**.

நாங்கள் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கையைச் சார்ந்த வர்கள். அதாவது, நபிவழியையும் நபித்தோழர்களையும் பின்பற்றியவர்கள் சென்ற பாதையே சீரான, செம்மையான, நேரிய பாதை என்று நம்புகின்ற வர்கள். இஸ்லாமின் பெயரால் பல பிரிவினர்கள் வழிதவறிய கொள்கை களையும், பாவங்கள் நிறைந்த வாழ்க்கை முறைகளையும் பரப்பியபடி இயங்கிவருவதால், அவர்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டவே எங்களை அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்காரர்கள் என்கிறோம். இதுவோர் இயக்கப் பெயர் அல்ல. குறிப்பிட்ட கொள்கைகளையும் பண்புகளையும் பாரம்பரிய நபிவழி அறிஞர்களின் அறிவுரைப்படி பின்பற்றுவோரின் அடையாளப் பெயர். எனவே, 'குர்ஆனும் ஹதீஸுமே எங்கள் கொள்கை' எனும் வாதத்தை முன்வைத்து, 'நாங்கள் சொல்வதுதான் மார்க்கம்' என்று எங்கள் சுயக்கருத்துகளை மார்க்கமாக ஒருக்காலும் வாதிடமாட்டோம். அது நமது இரட்சகன் நம் அனைவருக்குமே தடுத்ததல்லவா? ஒரு நீண்ட பாரம்பரியக் கல்வி மிகவும் பத்திரமாக மறுமைநாள் வரை நமக்கு வழங்கப்பட்டுவிட்டதே? புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்துச் சொல்ல என்ன இருக்கிறது அல்லாஹ்வின் அடியார்களே?

அஹ்லுஸ் ஸுன்னாவின் கல்வி என்பது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடமிருந்து தொடங்குகின்றது. இறைத்தூதர் மிகத் தெளிவாகப் போதித்துவிட்டார். அதையே அல்இஸ்லாம், அஸ்ஸுன்னா என்கிறோம். அந்தத் தூதரின் போதனைகளை உண்மையான விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும் அவரின் தோழர்கள் கற்றுக்கொண்டு பின்பற்றினார்கள். அவர்களையே முதல் அஹ்லுஸ் ஸுன்னா என்கிறோம். அவர்களிடம் வலுவான கொள்கை ஒற்றுமை இருந்ததால், அவர்களே முதல் அல்ஜமாஅத்தும்கூட. ஆக, இவர்களிலிருந்து தொடங்கியது அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் கொள்கைகள். இவர்களைப் பின்பற்றி இதே பாதையில் வந்தார்கள் அடுத்த தலைமுறையான தாபிஊன். இவர்களைப் பின்பற்றியே அடுத்த தலைமுறையான தபஉ தாபிஈன் வந்தார்கள்.

எங்கள் இரட்சகனின் திருப்பொருத்தத்தை நாடியவர்களாக நாங்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறோம், இந்த மூன்று தலைமுறைகள்தான் எங்களின் கொள்கைகளுக்கும் மார்க்கப் புரிதல்களுக்கும் முன்மாதிரிகள்; அளவுகோல்கள். ஏனென்றால், இவர்களையே நம்முடைய இரட்சகனின் தூதர் மிகச் சிறந்த தலைமுறையினராக அங்கீகரித்து முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள். இவர்களையே அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் அல்லது ஸலஃபுஸ்ஸாலிஹீன் (முன்சென்ற நல்லோர்கள்) என்று இஸ்லாமிய பேரறிஞர்கள் எல்லோருமே ஏற்றுக்கொண்டார்கள். அகீதா (இஸ்லாமிய நம்பிக்கைகள்), ஃபிக்ஹ் (சட்டதிட்டங்கள்), தஃப்சீர் (திருக்குர்ஆன் விளக்கங்கள்), ஹதீஸ் (நபிவழிச் செய்தி)கள் ஆகிய இஸ்லாமியக் கல்வியின் அனைத்துத் துறைகளிலும் இந்த ஸலஃபைப் பின்பற்றுகிறவர்களே உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் ஆவார்கள்.

ஸலஃப் சென்ற பாதையே நேரான, பாதுகாப்பான, வழிபிறழாத, குழப்பமற்ற தெளிவான பாதை. இதே பாதையில்தான் ஃபிக்ஹ் துறைக்குப் பெரும் சேவையாற்றிய நான்கு மத்ஹபுகளின் இமாம்கள் சென்றார்கள். அவர்களோடு நபிவழியைப் பாதுகாக்கப் பெரும் தியாக வாழ்க்கை வாழ்ந்த (ஹதீஸ் ஆய்வாளர்கள்) முஹத்திஸ்களும் சென்றார்கள். (குர்ஆன் விரிவுரையாளர்கள்) முஃபஸ்ஸிர்களும் சென்றார்கள். ஆகவேதான், இவர்கள் அனைவரும் அஹ்லுஸ்ஸுன்னா (நபிவழிக்காரர்கள்), அஹ்லுல் ஹதீஸ் (நபிமொழிக்காரர்கள்), அஹ்லுல் இல்ம் (கல்விமான்கள்) போன்ற பண்புப் பெயர்களால் கண்ணியப்படுத்தப்படுகிறார்கள். நாங்களும் இவர்களையே போற்றுகின்றோம். இவர்களின் பாதைக்கு எதிராகச் சென்று

போதிலும், அல்லாஹ்வின் அருளைப் பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம். நீங்கள் பாவத்திலிருந்து விலகி, மனம் வருந்தி மன்னிப்பைக் கோரினால் நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிடுவான். ஏனென்றால், நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும், கருணை உடையவனுமாக இருக்கின்றான்' (39:53) என்ற வசனமாகும்.

இந்த வசனத்தைப் பற்றி ஸலஃபில் ஒருவர் 'அல்லாஹ்வின் வேதத்திலேயே அவனது கருணைமீது ஆசையைத் தூண்டுகிற வசனங்களில் மிகவும் முக்கியமானது இது' என்றார்.

1. பாவமன்னிப்புத் தேடலின் சிறப்புகள்

பாவமன்னிப்புத் தேடச் சொல்லி தூண்டுகின்ற, அதன் சிறப்பைக் குறித்தும் அதனால் இவ்வுலகிலும் மறுமையிலும் ஏற்படுகின்ற பலன்கள் குறித்தும் அல்லாஹ் கூறியுள்ளான். நூஹ் ﷺ அவர்கள் கூறியதாக அல்லாஹ் குர்ஆனில் கூறிக்காண்பிக்கிறான்:

فَقُلْتُ اسْتَغْفِرُوا رَبَّكُمْ إِنَّهُ كَانَ غَفَّارًا يُرْسِلِ السَّمَاءَ عَلَيْكُمْ مِدْرَارًا وَيُمْدِدْكُمْ بِأَمْوَالٍ وَبَنِينَ وَيَجْعَلْ لَكُمْ جَنَّاتٍ وَيَجْعَلْ لَكُمْ أَنْهَارًا

'உங்கள் இறைவனிடம் மன்னிப்பைக் கோருங்கள். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்புடையவன்' என்றும் கூறினேன். அப்படிச் செய்வீர்களாயின்,

- தடைப்பட்டிருக்கும் மழையை உங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்புவான்.
- செல்வங்களையும், மக்களையும் கொடுத்து, உங்களுக்கு உதவி புரிவான்.
- உங்களுக்குத் தோட்டங்களையும் உற்பத்தி செய்து, அவற்றில் ஆறுகளையும் ஓடச் செய்வான். (குர்ஆன் 71:10–12)

இந்த மேன்மையான வசனங்களில் அதிகமான படிப்பினைகள் அடங்கியுள்ளன. பாவமன்னிப்புத் தேடுபவர்களுக்கும் அதற்குரிய பிரார்த்தனைத் தொடர்ந்து செய்து வருபவர்களுக்கும் உரிய பெரும் பலன்களை இவை தெளிவுபடுத்துகின்றன.

1

பாவமன்னிப்புக்கான மகத்தான வாசகம்

❀

இந்தச் சிறிய நூலில் இஸ்திங்ஃபாரின் வாசகங்களில் ஒரு மகத்தான வாசகத்தைப் பற்றி விளக்கப்படுகிறது. இந்த இஸ்திங்ஃபார் நபிமொழிகளில் வந்துள்ளது. மார்க்க அறிஞர்கள் கூறுவது போன்று இந்த இஸ்திங்ஃபார் வாசகம் மிகச் சிறப்பு வாய்ந்த நிறைவான வாசகமாகும். ஆகவேதான் இதை மனனம் செய்வதும் விளங்குவதும் இதன்படிச் செயல்படுவதும் அவசியம்.

நபி ﷺ கூறியதாக ஷத்தாது இப்னு அவ்ஸ் ؓ அறிவிக்கிறார்கள்.

سَيِّدُ الِاسْتِغْفَارِ أَنْ تَقُولَ اَللَّهُمَّ أَنْتَ رَبِّي لاَ إِلَهَ إِلَّا أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوءُ لَكَ بِذَنْبِي فَاغْفِرْ لِي، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ قَالَ وَمَنْ قَالَهَا مِنَ النَّهَارِ مُوقِنًا بِهَا، فَمَاتَ مِنْ يَوْمِهِ قَبْلَ أَنْ يُمْسِيَ، فَهُوَ مِنْ أَهْلِ الجَنَّةِ، وَمَنْ قَالَهَا مِنَ اللَّيْلِ وَهُوَ مُوقِنٌ بِهَا، فَمَاتَ قَبْلَ أَنْ يُصْبِحَ، فَهُوَ مِنْ أَهْلِ الجَنَّةِ

‘ஸய்யிதுல் இஸ்திங்ஃபார் எனப்படும் தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரிக்கையை ஓர் அடியார் இவ்வாறு சொல்ல வேண்டும். அல்லாஹ்வே, நீ என் இரட்சகன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. என்னை நீ படைத்தாய். நான் உன் அடிமையாவேன். என்னால் இயன்ற மட்டும் நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதிமொழியையும், வாக்குறுதியையும் நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு கோருகிறேன். எனக்கு நீ வழங்கியுள்ள அருட்கொடைகளை உன்னிடம் நான் ஒப்புக்கொள்கிறேன். என் பாவங்களையும் ஒப்புக்கொள்கிறேன். ஆகவே, என்னை மன்னிப்பாயாக. ஏனெனில், உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் யாரும் இல்லை.

2

اَللّٰهُمَّ

அல்லாஹும்ம – அல்லாஹ்வே

❀

இந்தப் பிரார்த்தனையின் ஆரம்பத்தில் நபியவர்கள் 'அல்லாஹும்ம என்று ஓர் அடியான் சொல்வதாக இருக்கும்' என்று கூறியுள்ளார்கள். இந்த 'அல்லாஹும்ம' என்ற வார்த்தைக்கு ஒருமித்த கருத்துப்படி 'அல்லாஹ்வே!' என்று பொருள். அல்லாஹும்ம என்ற பதம் குர்ஆனிலும் நபிமொழியிலும் வந்துள்ள பிரார்த்தனைகளில் பெரும்பாலும் வருகிறது.

ஜலாஉல் அஃப்ஹாம் என்ற நூலில் இப்னுல் கய்யிம்[4] ﵀ கூறுகிறார்கள்: 'அல்லாஹும்ம என்ற வார்த்தைக்கு 'அல்லாஹ்வே' (யா அல்லாஹ்!) என்ற பொருள்தான் என்பதில் கருத்துவேறுபாடு இல்லை. எனவேதான், பிரார்த்தனை செய்து வேண்டிக்கொள்கிற வாசக அமைப்போடு மட்டும் இணைத்து அல்லாஹும்ம என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, 'யா அல்லாஹ்! மிக்க மன்னிப்பாளன். மிகக் கிருபையுடையவன்' என்றரீதியில் அல்லாஹும்ம

---

4 இப்னுல் கய்யிம்: முஹம்மது இப்னு அபூபக்ர் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 691 (கி.பி. 1292) ஸஃபர் 7 அன்று டமாஸ்கஸில் பிறப்பு. ஏழு வயதிலிருந்தே அறிஞர்களின் சபைகளில் கல்வி தேடி அமர்ந்தார்கள். மார்க்க அறிஞராகிய தம் தந்தையிடமும், அக்காலத்தில் கல்விக்குப் பேர்போன சுமார் இருபத்தைந்து அறிஞர்களிடமும் கற்றார்கள். ஹிஜ்ரீ 712 (கி.பி. 1312)இல் இமாம் இப்னு தைமிய்யாவைச் சந்தித்து, அவர்கள் மரணித்த ஹிஜ்ரீ 728 வரை அவர்களுடனே தங்கியிருந்து கல்வி பெற்றார்கள். இமாம்கள் இப்னு கஸீர், இப்னு ரஜப் அல்ஹன்பலீ, அத்தஹபீ, இப்னு அப்துல் ஹாதீ, தகீய்யுத்தீன் அஸ்ஸுபுகீ ﵀ போன்றோர் இவரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வணக்க வழிபாடுகளில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட இமாமவர்கள், ஹிஜ்ரீ 751 (கி.பி. 1350) ரஜப் 13இல் மரணித்தார்கள்.

3

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّي لاَ إِلَهَ إِلَّا أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ،

அல்லாஹ்வே, நீ என் இரட்சகன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. என்னை நீ படைத்தாய். நான் உன் அடிமையாவேன்.

❀

இஸ்திங்ஃபாரின் ஆரம்பமாக உள்ள 'அல்லாஹ்வே, நீ என் இரட்சகன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. என்னை நீ படைத்தாய். நான் உன் அடிமையாவேன்' என்ற வாசக அமைப்பில் இரண்டுவிதமான தவ்ஹீதும் ஒன்றாக வந்துள்ளது.

எதை உறுதிப்படுத்தி, அதைக் கொண்டுவரவும் நிறைவுபடுத்தவும் நாம் ஏவப்பட்டுள்ளோமோ அந்தத் தவ்ஹீது இரண்டு வகைப்படும் என்று மார்க்க அறிஞர்கள் பிரித்துள்ளனர்.

முதல் வகை: அல்லாஹ்வை அறிந்து, உறுதிப்படுத்தி அவன் ஒருவனே இறைவன் எனக் கூறுவது.

இது அல்லாஹ்தான் முழு உலகையும் படைத்துப் பரிபாலிக்கிறான் என்றும் அவனே படைப்பாளன்; வாழ்வாதாரம் வழங்குபவன்; அருள்புரிபவன்; சட்டங்கள் இயற்றும் அதிகாரமிக்கவன்; தனது படைப்பினங்களின் பணிகளைத் திட்டமிடுபவன் எனவும் ஒப்புக் கொள்வதோடு சம்பந்தப்பட்டதாகும்.

மேலும், அல்லாஹ்வின் வேதத்திலும் நபிமொழியிலும் வந்துள்ள அவனது பெயர்களையும் பண்புகளையும் அப்படியே ஒப்புக்கொள்வதாகும். ஆகவே, அல்லாஹ்வை அறிந்து, உறுதிப்படுத்தி அவன் ஒருவனே இறைவன் என்று நம்புவதில்,

4

لاَ إِلَهَ إِلَّا أَنْتَ

உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இரட்சகன் இல்லை

❀

‘உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இரட்சகன் இல்லை’ என்ற இந்த நபிமொழியின் வாசகம் அல்லாஹ் மட்டுமே வணக்கத் திற்குரிய உண்மையான இரட்சகன் என ஒப்புக்கொள்வதாகும். இந்த மேன்மைமிக்க வார்த்தையைக் கொண்டே நபிமொழி ஆரம்பிக்கின்றது. அல்லாஹ் மட்டுமே வணங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் படைப்பினங்கள் படைக்கப்பட்டுள்ளன. இதற்காகவே வானங்களும் பூமியும் நிலைபெற்றுள்ளன. சுவனமும் நரகமும் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் இரண்டு வகையினர். ஒரு வகை, நற்பாக்கியசாலிகள். இன்னொரு வகை துர்பாக்கியசாலிகள். முன்னவர்கள் சொர்க்க வாசிகள். பின்னவர்கள் நரகவாசிகள். அல்லாஹ் மட்டுமே வணக்கத் திற்குரிய இரட்சகன் எனும் கலிமாவை ஏற்றவர்கள் சொர்க்கவாசிகள். அதை விட்டுவிட்டவர்கள் நரகவாசிகள். ஆக, மேன்மை பொருந்திய இந்தக் கலிமாவின் மூலம் ஸய்யிதுல் இஸ்திங்ஃபார் தொடங்கப் பட்டுள்ளது.

இந்த கலிமாவை மொழிபவர் இதற்கு குர்ஆனிலும் நபிமொழியி லும் வந்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் இது பலன்தரும் என மார்க்க அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இதை அல்லாமா ஹாஃபிள் இப்னு அஹ்மது அல்ஹகமீ ﵀ அவர்கள் தமது ஸுல்லமுல் உஸூல் என்ற கவிதை நூலில் கூறுகிறார்:

وَبِشُرُوطٍ سَبْعَةٍ قَدْ قُيِّدَتْ ... وَفِي نُصُوصِ الْوَحْيِ حَقًّا وَرَدَتْ

فَإِنَّهُ لَمْ يَنْتَفِعْ قَائِلُهَا ... بِالنُّطْقِ إِلَّا حَيْثُ يَسْتَكْمِلُهَا

5

وَأَنَا عَبْدُكَ،

நான் உன் அடிமை

❀

ஸய்யிதுல் இஸ்திங்ஃபாரில் அடுத்து வருகிற வாசகம் 'நான் உன் அடிமை' என்பதாகும். ஸய்யிதுல் இஸ்திங்ஃபாரை மொழி கின்ற மனிதன் அல்லாஹ்வுக்கு தான் அடிமையாக இருப்பதை ஒப்புக்கொள்கிறான்.

அனைத்துப் படைப்பினங்களும் அல்லாஹ்வின் அடிமைகளே. படைப்பினங்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிவது இரண்டு வகை.

- ஒன்று, அவன் நம்மைப் படைத்து வளர்த்துப் பரிபாலனம் செய்கிறான் என்பதனால் அவனுக்கு அடிபணிவது.
- இன்னொன்று, அவனே வணக்கத்திற்குரிய இரட்சகனாக இருக்கிறான் என்பதனால் அவனுக்கு அடிபணிவது.

முதல் வகையான அடிபணிதலின் பொருள், படைப்பினங்கள் அனைத்தையும் அல்லாஹ்வே உருவாக்கியுள்ளான். அது மட்டு மின்றி, அவற்றைப் படைத்து, வாழ்வாதாரம் வழங்குகிறான். படைப்பினங்களுக்கு உயிர் கொடுத்து, மரணம் ஏற்படுத்துகிறான். இந்த அனைத்து காரியங்களிலும் அல்லாஹ்வோடு சேர்ந்து பணியாற்றுபவர் யாரும் இல்லை. அவன் மட்டுமே தனித்து அனைத்தையும் செய்கிறான். அல்லாஹ் வேதத்தில்,

إِنْ كُلُّ مَنْ فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ إِلَّا آتِي الرَّحْمَنِ عَبْدًا

ஏனென்றால், வானங்களிலும் பூமியிலும் உள்ள (வானவர்கள், ஜின்கள் மற்றும் மனிதர்கள் ஆகிய) ஒவ்வொருவரும் அளவற்ற அருளாளனாகிய அவனிடம் அடிமையாகவே வருகிறார்கள் (19:93) என்கிறான்.

7

أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوءُ لَكَ بِذَنْبِي

எனக்கு நீ வழங்கியுள்ள அருட்கொடைகளை உன்னிடம் நான் ஒப்புக்கொள்கிறேன். என் பாவங்களையும் ஒப்புக்கொள்கிறேன்.

❀

ஸய்யிதுல் இஸ்திங்ஃபாரின் அடுத்த வாசகம் 'எனக்கு நீ வழங்கியுள்ள அருட்கொடைகளை உன்னிடம் நான் ஒப்புக்கொள்கிறேன். என் பாவங்களையும் ஒப்புக்கொள்கிறேன்' என்பதாகும். இந்த இடத்தில் இரண்டு விசயங்களை ஒன்றன்பின் ஒன்றாக இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

- ஒன்று, அல்லாஹ்வின் அருட்கொடைகளைக் கண்கூடாக கண்டுகொண்டிருப்பது. நினைத்துப் பார்ப்பது.
- இன்னொன்று, உள்ளத்திலும் செயல்பாட்டிலும் ஏற்படுகிற குறையை ஆய்வு செய்வது. அதாவது, தான் பாவி என்பதை ஒப்புக்கொள்வது.

அருட்கொடைகளைக் கண்கூடாகக் காணும்போது அவற்றை செய்தவனுக்கு நன்றி செலுத்தவும், அவன்மீது பிரியம் கொள்ளவும் முற்படுவோம்.

தான் பாவி என்பதை நினைக்கும்போது தான் இழிவானவன் என்பதும், அல்லாஹ்வின்பால் தேவையுள்ளவன்; அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பாவமீட்சி செய்ய வேண்டியவன் என்பதும் புரியவரும்.ஆகவே, மனிதன் தன் இரட்சகனை உபகாரம் புரிபவனாகவும், கருணையாளனாகவுமே பார்ப்பான். தன்னைப் பாவியாகவும், குறையுள்ளவனாகவுமே கருதுவான்.

இதில் 'உனது அருட்கொடைகள்' என்று வந்திருப்பது அல்லாஹ்வின் அருட்கொடைகள் அனைத்தையும் ஒப்புக்கொள்வதாகும்.

8

وَأَبُوءُ لَكَ بِذَنْبِي

என் பாவங்களையும் ஒப்புக்கொள்கிறேன்

❀

இந்த ஸய்யிதுல் இஸ்திங்ஃபாரின் அடுத்த வாசகம் 'என் பாவங்களையும் ஒப்புக்கொள்கிறேன்' என்பதாகும். மார்க்க அறிஞர்கள் இதற்கு இரண்டு விதமான பொருள் கூறுகிறார்கள்.

- முதல் பொருள், பரிபூரணமான முறையில் உன் அருட்கொடைகளுக்கு என்னால் நன்றி செலுத்த முடியாததின் காரணமாக நான் பாவம் செய்துவிட்டதாக ஒப்புக்கொள்கிறேன்.

'எனக்கு நீ வழங்கியுள்ள அருட்கொடைகளை உன்னிடம் நான் ஒப்புக்கொள்கிறேன்' என்ற வாசகத்திற்கு அடுத்தே இந்த வாசகம் வருவதால் இந்தப் பொருள் கூறப்படுகிறது. அதாவது, உன் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதில் நான் குறையுள்ளவனே என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

- இரண்டாவது பொருள், பொதுவாகவே பாவத்தில் வீழ்ந்து விட்டதாக ஒப்புக்கொள்வதாகும். அதாவது, என் பாவங்களை நான் ஒப்புக்கொள்கிறேன். எல்லாப் பாவங்களும் என்னிலிருந்தே ஏற்பட்டுள்ளன என்பதாகும்.

ஆம், அடியான் தன்னைப் பாவி என்றும், அல்லாஹ்வுக்குச் செய்கிற கடமைகளில் குறைவைத்துள்ளவன் என்றும் ஏற்றுக் கொள்வதுதான் அவன் தன் குறையை ஒப்புக்கொண்டு தவ்பா செய்கிற முதல் வழியாகும். ஆயினும், அவன் குற்றம் புரிந்து, பெரும்பாவங்களைச் செய்திருக்கின்ற நிலையிலும் தன்னைப் பாவி என்றும் குறையுள்ளவன் என்றும் உணராதிருந்தால் தவ்பா செய்வதற்குரிய வாய்ப்புகள் அவனுக்கு அருளப்பட்டால் தவிர அவனால் தவ்பா செய்வது இயலாத காரியம்.

9

فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

ஏனெனில், உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் யாரும் இல்லை

❀

ஸய்யிதுல் இஸ்திங்ஃபார் நபிமொழியின் இறுதியில் 'ஏனெனில், உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் யாரும் இல்லை' என்று வந்துள்ளது. இந்த வாசகத்தில் அல்லாஹ் மட்டுமே பாவங்களை மன்னிப்பவன்; தன் அடியார்களின் தவ்பாவை ஏற்பவன் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகவேதான் அடியான் தவ்பா செய்யவும் பாவமன்னிப்புத் தேடவும் அல்லாஹ் ஒருவனையே முன்னோக்குகிறான். ஏனெனில், அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் பாவங்களை மன்னிக்கமாட்டார். அல்லாஹ் கூறுகிறான்:

وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنْفُسَهُمْ ذَكَرُوا اللَّهَ فَاسْتَغْفَرُوا لِذُنُوبِهِمْ وَمَنْ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللَّهُ وَلَمْ يُصِرُّوا عَلَى مَا فَعَلُوا وَهُمْ يَعْلَمُونَ

'அவர்கள் ஏதேனும் ஒரு மானக்கேடான செயலைச் செய்து விட்டாலும் அல்லது தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அல்லாஹ்வை நினைத்து அவனிடமே தங்களுடைய பாவமன்னிப்பைத் தேடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர குற்றங்களை மன்னிப்பவன் யார்? (அவர்கள் செய்த தவறான செயலை தவறென்று) அவர்கள் அறிந்துகொண்டால் அதில் நிலைத்திருக்கவும்மாட்டார்கள். (உடனே அதைவிட்டு விலகிவிடுவார்கள்.') (குர்ஆன் 3:135)

இந்த நபிமொழியின் பலன்களில் ஒன்று, இதில் இரண்டு விசயங்கள் கூறப்பட்டுள்ளன.

1. தவ்ஹீது - அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என்று நம்புவது